©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 335] CHENNAI, TUESDAY, NOVEMBER 12, 2013
Aippasi 26, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், விழுப்புரம் மாவட்டம்.**

**விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/2623/2012/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/244(a-1)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி நிதியிலிருந்து உரிய செலவுச்சீட்டுகள் மற்றும் பட்டியல்கள் ஏதுமின்றி ரூ. 2,95,160 முறையற்ற செலவினம் மேற்கொண்டமைக்காகவும், ஊராட்சி பதிவேடுகளை முறையாக பராமரிக்க தவறியமைக்காகவும், காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி A. வளர்மதி என்பவரை காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பதவிநீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/2623/2012/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/244(a-2)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **206**, உட்பிரிவு **11—**ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், காட்டுநெமிலி ஊராட்சி நிதியிலிருந்து உரிய செலவுச்சீட்டுகள் மற்றும் பட்டியல் ஏதுமின்றி ரூ. **2,95,160** முறையற்ற செலவினம் மேற்கொள்ள ஊராட்சி மன்ற தலைவருடன் காசோலைகளில் கூட்டு கையொப்பம் இட்டு செலவினம் மேற்கொண்டமைக்காக காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி A. அகிலா என்பரை காட்டுநெமிலி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **262(1)—**ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விழுப்புரம்,
**2013 நவம்பர் 11.**

**வா. சம்பத்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU